27th March 1969] [திரு. எஸ். மாதவன்]

பரிவோடு பரிசீலிக்கும் என்று கூறி, போனஸ் பற்றிய தீர்மானத்தை வலியுறுத்தக் கூடாது என்று சொல்லி என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

THIRU G. KRISHNAMOORTHY : I thank the Government for the assurance given. In view of the assurance given by the Minister for Education, I withdraw the Resolution.

The Resolution was, by leave, withdrawn.

(3) CHANGE OF NAME OF THE CAPITAL OF TAMIL NADU.

MR. CHAIRMAN : The hon. Member, Thiru N. R. Thiagarajan, is not in his seat. The resolution is deemed to have been withdrawn.

(4) COTTON MILLS WORKERS' RELIEF COMMITTEE

திரு வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட என்னுடைய தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள் திறக்கப்படும் வரை, பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக 'பஞ்சாலைத் தொழிலாளர் நிவாரணக் கமிட்டி' என்பதாக ஓர் அமைப்பினை ஏற்படுத்த வேண்டுமென்றும், இதற்காகத் தனியான நிவாரணநிதி ஒன்று ஒதுக்கலாமென்றும் இம்மன்றம் அரசினருக்குப் பரிந்துரைக்கின்றது".

தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைக் கொடுத்த நேரத்திலே கோவையிலிருந்து ஒரு பெரிய தொழிலாளர் குழு ஒன்று சென்னை வரை பாத யாத்திரையாக நடந்து வந்து, அரசியல் சாசன அடிப்படையில் **Mass petition** ஒன்றை, அசெம்பிளி துணை சபாநாயகருக்குக் கொடுத்திருக்கிறது. அவர்கள் ஆக்க பூர்வமான யோசனையை அரசாங்கத்திற்கு சொல்லவும், அரசாங்கத்திற்கு இக்கட்டான எந்த நிலைமையும் ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தோடும், இப்படிப்பட்ட குழு வேண்டுமென்ற யோசனையைச் சொன்னார்கள். அரசாங்கமும் அந்த நல்ல யோசனையை ஏற்றுக் கொண்டு இப்போது கொள்கை அளவில், ஏன், செயலளவில் கூட அதை அமைப்பதற்கான எல்லாவிதமான நடவடிக்கையையும் எடுத்திருப்பதைக்கண்டு மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். இந்த நேரத்தில் கூட இந்தத் தீர்மானம் அவசியபபடுகிறது என்பதை மட்டும் ஒரு சில வார்த்தைகளில் சொல்ல ஆசைப்படுகிறேன். இங்கே இரண்டு விதமான பிரச்னைகள் இருக்கின்றன. டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் அமைப்பதாக அரசாங்கம் வாக்குறுதி கொடுத்தது. கொடுத்து சுமார் இரண்டு மாதங்கள் ஆகின்றன. அரசாங்கம் "அமைக்கிறோம், அமைக்கிறோம்", என்று சொல்லிக்கொண்டிருப்பதைக் காட்டிலும் அதைத் தயவு செய்து அமைத்துவிடுங்களேன் என்று கேட்டுக் கொள்கிறேன். கார்ப்பரேஷன் அமைப்பதில் பல கசப்பான உண்மைகள் எல்லாம் இருக்கின்றன. அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொன்னார்கள். குறிப்பாக சில ஆலைகளை திறக்கவே முடியாது என்றார்கள். நானும் அந்தக் கருத்தைக் கொண்டிருக்கிறேன். ஆனால் இந்தக் கசப்பான உண்மைகளை மனதில் வைத்துக்கொண்டு "திறக்கிறோம், திறக்கிறோம்" என்று வெறும் உத்தரவாதங்களை கொடுப்பதற்குப் பதிலாக எத்தனை மில்களைத் திறக்க முடியும், எந்தெந்த மில்களைத் திறக்கப் போகிறோம் என்பதை கார்ப்பரேஷன் அமைத்து திறந்து விடுங்கள் என்று வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன். இதைவிட முக்கியமான விஷயம் என்னவென்றால் நிதிநிலையில் கூறியபடி இருக்காமல் இந்தக் கார்ப்பரேஷன் அமைக்கும் முயற்சியும் தேங்கிய நிலையில் இருக்கக்கூடாது.